**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 15/2015</u>**

நாள் 18.02.2026

DW2 – செ. ராஜேந்திரன்

த/பெ – சென்னியப்பன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் B.A.வரை படித்துள்ளேன். 3–ம் பிரதிவாதி வெங்கடாசலத்தின் மனைவியும், எனது மனைவியும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது மனைவியின் தகப்பனார் பெயர் கே.கே.பழனிச்சாமி என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் என்பவர் 3–ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். அந்த கருப்பண்ண கவுண்டர் 17.07.2009–ம் தேதியில் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் இறந்து போய்விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் அவரை நேரில் பார்த்துள்ளேன். அதனால், எனது மனைவியின் சகோதரியான ராதாமணி க/பெ. வெங்கடாசலத்தின் வீட்டிற்கு பலமுறை சென்றுள்ளேன். அந்த கருப்பண்ண கவுண்டர் அந்த சமயம் உடல்நிலை சரியில்லாமல் இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு 6,7 மாதங்களுக்கு முன்பாக உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்றால் வயது முதிர்வு காரணமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அந்த கருப்பண்ண கவுண்டருக்கு TMS மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கருப்பண்ண கவுண்டரின் கைரேகைக்கு

மேலே இடது கை வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் வலது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளேன் என்ற வாசகம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீதம் கையால் எழுதப்பட்ட வாசகங்கள் குறித்து அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் 4–ம் பக்கத்தில் கடைசி வரியில் எந்தவொரு குறிப்பும் எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி இடது கை வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் வலது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளேன் என்ற வாசகம் கையால் எழுதப்பட்டுள்ளது என்ற வாசகம் நான் சாட்சி கையொப்பம் போடும் போது இல்லை என்று சாட்சி தெரிவித்து விட்டு பின்னர் ரொம்ப காலம் ஆகி விட்டதால் எனக்கு ஞாபகமில்லை என்று தெரிவித்தார். அந்த வாசகத்தை யார் எழுதினார் என்றால் அது எனக்கு தெரியாது.

3. 15.05.2009–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட போது கருப்பண்ண கவுண்டருக்கு வாத நோய் இருந்தது. அவ்வாறு எத்தனை மாதம் கருப்பண்ண கவுண்டர் வாத நோயால் இருந்து வந்தார் என்றால் சுமார் 1 மாத காலமாக வாத நோயால் இருந்தார். சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து இடது கை ரேகை வைக்காமல் எதற்காக வலது கைரேகை வைத்துள்ளேன் என்று கருப்பண்ண கவுண்டரிடம் சார்பதிவாளர் கேட்டாரா? என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த கருப்பண்ண கவுண்டர் ஆவணத்தில் கைரேகை வைத்த விபரம் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு வலது கைரேகை வைத்துள்ளதை சம்பந்தமாக சார்பதிவாளர் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்தவித குறிப்பும் எழுதவில்லை என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மற்றொரு சாட்சியாக செல்வராஜ் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். அந்த ஆவணத்தின் பதிவின் போது கருப்பண்ண கவுண்டருக்கு உடல்நிலை சரியில்லாதது குறித்த மருத்துவ ஆவணங்கள்

எதுவும் சார்பதிவாளரிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் இடது கையால் கைரேகை வைக்க முடியாத நிலையில் இருந்தாரா? என்றால் அவ்வாறு தான் இருந்தார். கருப்பண்ண கவுண்டர் பக்கவாத நோயால் இருந்து வந்த நிலையில் இடது கை வராத நிலையில் அதேபோல் எந்த கால் அசைவு இல்லாமல் இருந்தது என்றால் இரண்டு கால்களும் நல்ல அசைவுடன் தான் இருந்தது. அதனால், கருப்பண்ண கவுண்டருக்கு இடது கை தவிர மற்ற உறுப்புகள் அனைத்தும் நன்றாக தான் இருந்தது.

4. பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் ஊத்துக்குளியில் வைத்து தயார் செய்யப்பட்டது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அந்த சொத்து சம்பந்தமாக உயில் சாசனம், ரத்து ஆவணம் பற்றிய விபரம் அதில் சொல்லப்பட்டுள்ளதா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.10 மற்றும் பி.வா.சா.ஆ.15 ஆவணங்களில் கருப்பண்ண கவுண்டர் ஆங்கிலத்தில் வலது கையில் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனால், பி.வா.சா.ஆ–9 செட்டில்மெண்ட் ஆவணத்திலும் கருப்பண்ண கவுண்டர் அவரது வலது கையால் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்திருக்க முடியும் என்றால் சரிதான், ஆனால், கைரேகையை வைப்பதாக சொல்லி கைரேகை வைத்தார். அவ்வாறு ஆவண எழுத்தரிடம் சொன்னார். வேறு யாரிடமும் அவ்வாறு அவர் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட விபரம் 3–ம் பிரதிவாதி வெங்கடாசலத்தின் அண்ணன் செல்வமுத்துவுக்கு தெரியுமா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் வெங்கடாசலம் திருப்பூர் டவுன் பள்ளி வீதியில் 4–வது கிராஸ், நம்பர் 16 வீட்டில் வசித்து வருவதாக விலாசம் கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் கருப்பண்ண கவுண்டர் தாவா சொத்தில் வசித்து

வருவதால் தான் முகவரி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கடாசலத்தின் அண்ணன் செல்வமுத்துவும் தாவா சொத்தில் தான் வசித்து வருவதாக தான் தாவா பிராதுவில் விலாசம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், கருப்பண்ண கவுண்டரும், அவரது பெரிய மகன் செல்வமுத்துவும் ஒரே விலாசத்தில் வசித்து வரும் நிலையில் அந்த செல்வமுத்துவுக்கு தெரியாமல் தான் பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எனது சகலை 2–ம் பிரதிவாதி வெங்கடாசலம் திருப்பூர் விலாசத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் வீடு மட்டும் தான் உள்ளது, அவர் திம்மநாயக்கன்பாளையத்தில் வசித்து வருகிறார். அவ்வாறு கருப்பண்ண கவுண்டர் உண்மையிலேயே பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தை 3–ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்திருந்தால் அந்த விபரம் அவரது பெரிய மகனான செல்வமுத்துவுக்கும் தெரிந்து தான் எழுதி கொடுத்திருப்பார் என்றும், ஆனால், மோசடியாக செல்வமுத்துவுக்கு தெரியாமல் ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது கருப்பண்ண கவுண்டரிடம் அவரது பெரிய மகன் செல்வமுத்து மற்றும் மகள் ரத்தினம் ஆகியோருக்கு சொத்து எழுதி வைக்காதது குறித்து அவரிடம் கேட்டேனா? என்றால் இல்லை. எந்த விருப்பத்தின் பேரில் வெங்கடாசலத்திற்கு மட்டும் சொத்தை எழுதி வைத்தார் என்ற வாசகம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளதா? என்றால் இல்லை.

5. கருப்பண்ண கவுண்டருக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் வாதி அனைவரும் வாரிசுகள் என்றால் சரிதான். கடந்த 06.04.2009–ம் தேதியில் கருப்பண்ண கவுண்டர், 2,3 பிரதிவாதிகள் மற்றும் மேற்படி பிரதிவாதிகளின் மகன்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களுடைய பூர்வீக வகையில்

பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியும், நாம் அனைவரும் பாகமாகாத இந்து கூட்டுக்குடும்ப பாகஸ்தர்கள் என்று கூறி பாகசாசனத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாகசாசனத்தில் வாதி ரத்தினம் தரப்பினராக கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பாகசாசனத்தில் உள்ள கருப்பண்ண கவுண்டரின் கையெழுத்துகள் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு மாதிரியாக உள்ளது என்றால் சரிதான், அவருக்கு வயதாகிவிட்டதால் அவ்வாறு கையெழுத்து போட்டுள்ளார். அப்போது அவருக்கு கை நடுக்கம் இருந்தது என்றால் சரிதான். அந்த கருப்பண்ண கவுண்டர் கடந்த 17.07.2009–ம் தேதியில் இறக்கும் வரையில் கை நடுக்கத்துடன் தான் இருந்து வந்தார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 ஆவணமான 30.04.2009–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்திலும் கருப்பண்ண கவுண்டரிடன் கையொப்பங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் மாறுபாடாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 பாகசாசனம் ஏற்பட்ட சமயத்தில் கருப்பண்ண கவுண்டரின் மகன்கள் மற்றும் பேரன்கள் ஆகியோருக்கு சொத்தில் கூட்டாக பங்கு உள்ளது என்றால் சரிதான். அதனால், கருப்பண்ண கவுண்டரின் மகளான வாதிக்கும் சொத்தில் பங்கு உண்டு என்றும், ஆனால், வாதியை பாகசாசனத்தில் தரப்பினராக சேர்க்கபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகசாசனம் ஏற்படுத்தப்பட்ட விபரம் வாதி ரத்தினத்திற்கு தெரியுமா? என்றால் அது எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டருக்கு அவர் இறக்கும் போது சுமார் 80 வயதிற்கு மேல் இருந்திருக்கும் என்றால் 75 – 80 வரையில் இருந்திருக்கும். ஆனால், பி.வா.சா.ஆ.15 பாகசாசனத்தில் உள்ள கருப்பண்ண கவுண்டரின் போட்டோவில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க வகையில் காணப்படுகிறது என்றால் அது பற்றி என்னால் சொல்ல முடியாது. பாகசாசனம் செய்ய

வேண்டி பத்திரத்தை கருப்பண்ண கவுண்டர் தான் வாங்கி வந்தார். அவர் எங்கு சென்று பத்திரத்தை வாங்கி வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பாகசாசனத்தில் நானும், எனது மாமனார் கே.கே.பழனிச்சாமி ஆகிய இருவரும் தான் சாட்சி கையொப்பம் செய்தார். நானும், எனது மாமனாரும் சேர்ந்து எனது சகலை வெங்கடாசலத்திற்கு ஆதாயமடைய வேண்டி கருப்பண்ண கவுண்டரின் கையொப்பத்தை போட்டு மோசடியாக பாகசாசனத்தை வாதிக்கு தெரியாமல் எழுதி கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.

6. கருப்பண்ண கவுண்டருக்கு பங்காளி வகையிலும், மற்ற உறவு முறையிலும் உறவினர்கள் அதிகம் என்றால் சரிதான். பாகசாசனத்தில் வெளிநபர்கள் மற்றும் வேறு உறவினர்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.15 பாகசாசனத்தில் கருப்பண்ண கவுண்டருக்கு சொத்து பாகமாக கொடுக்கப்பட்டதா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் வெங்கடாசலத்திற்கும், அவரது சகோதரர் செல்வமுத்துவுக்கும் அந்த பாகசாசனத்தில் சொத்து ஒதுக்கப்பட்டது, ஆனால் எந்தெந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்த 3 ஆவணங்களில் கண்ட சொத்து எந்தெந்த சொத்துக்கள் என்றும், அந்த சொத்து எங்கு அமைந்துள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டருக்கு அவரது மனைவியும், மகளும் மற்றும் செல்வமுத்து என்ற மகனும் உள்ளநிலையில் அவரது இளைய மகனான வெங்கடாசலம் பெயரில் மட்டும் பி.வா.சா.ஆ–9 செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைப்பதற்கான காரணம் என்ன என்றால் அது பற்றி கருப்பண்ண கவுண்டருக்கு தான் தெரியும்.

7. தாவா 1–ம் அயிட்ட சொத்தானது சுமார் 13 ஏக்கர் பரப்பு கொண்டது என்றால் சரிதான். அதில் எத்தனை கிணறு உள்ளது என்று எனக்கு தெரியாது. ஆனால், கிணற்று பாசனம் உண்டு. அந்த 13 ஏக்கரில் கருப்பண்ண கவுண்டர் சிறிய அளவில் விவசாயம் செய்து வந்தார். அவர் கால்நடைகளும் வைத்திருந்தார். அவருக்கு துரைசாமி தான் டிராக்டரில் வந்து உழவடித்து கொடுப்பார் என்றால் இல்லை. கருப்பண்ண கவுண்டர் தாவா 1–ம் அயிட்ட சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு தான் பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்தை வாங்கினார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 பாகாசனம் ஏற்பட்ட தேதியான 06.04.2009–ம் தேதி முதல் அவர் இறந்த தேதியான 17.07.2009 தேதி வரையில் கருப்பண்ண கவுண்டர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்து சரிவர கண்தெரியாமலும், காது கேட்காமலும் செல்வமுத்துவின் பராமரிப்பில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. நான் சொல்வது போல பி.வா.சா.ஆ.9, பி.வா.சா.ஆ.10, பி.வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் சார்பதிவளார் அலுவலகத்திற்கே கருப்பண்ண கவுண்டர் செல்லாத நிலையில் அவருடைய கையெழுத்தை மோசடியாக போட்டு ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 3–ம் பிரதிவாதி வெங்கடாசலம் திருப்பூரில் நிலையாக வசித்து வரும் நிலையில் கருப்பண்ண கவுண்டர் மேற்படி ஆவணங்களை எழுதி வைக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டர் இயற்கைக்கு மாறாக வலது கையில் கைரேகை வைத்துள்ள நிலையில் அதை பொறுத்து சார்பதிவளார் அந்த சம்பந்தப்பட்ட ஆவணத்தில் ஒரு குறிப்பு கண்டிப்பாக எழுதியிருப்பார் என்றும், அவ்வாறு குறிப்பு எதுவும் இல்லாத நிலையில் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது என்று சொன்னால்

சரியல்ல. மேற்படி ஆவணங்களை எழுதி வைத்த பிறகு கருப்பண்ண கவுண்டர் நல்ல நிலையில் தான் இருந்து வந்து இறந்து போய்விட்டார். நான் சொல்வது பொய் என்றும் ,மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து கருப்பண்ண கவுண்டர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கருப்பண்ண கவுண்டர் ஒவ்வொரு தாளிலும் வலது கைரேகையை எந்த இடத்தில் வைத்து வைத்தார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கு சொத்தில் பாகம் கிடைக்கக்கூடாது என்று மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டு 3—ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால், வாதிக்கு தாவா சொத்தில் சட்டப்படி பாக பாத்திய உரிமை உண்டு என்றால் சரியல்ல. அதனால், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக் கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :—** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.18 16:58:16 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**